பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 05 2025 **WEDNESDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆப்பரேஷன் சிந்தூர் நமது படையினரின் துணிச்சலையும், திறனையும் வெளிப்படுத்தியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. நாடுமுழுவதும் 244 மாவட்டங்களில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை இன்று நடைபெற்றது.

3. சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 22 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

4. தமிழகத்தில் பொறியியல் படிப்புக்கான விண்ணப்பப் பதிவு இன்று தொடங்கியது.

5. மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 23 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நமது படையினரின் துணிச்சலையும், திறனையும் வெளிப்படுத்தியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் எல்லைப் பகுதிகளுக்கான சாலை நிறுவனத்தின் ஆண்டு தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

ஆப்பரேஷன் சிந்தூரை சிறப்பாக நடத்திய பாதுகாப்புப் படையினருக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

தீவிரவாத அமைப்புகளின் இலக்குகள் துல்லியமாக இதில் தாக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலில் பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படையினருக்கு முழு ஆதரவு அளித்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களே, ஆப்பரேஷன் சிந்தூரில் கொல்லப்பட்டதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியும், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற அக்கட்சியின் அவசர பணிக்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜு கார்கே இதனை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளை குறிவைத்து பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இந்த துணிச்சலான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீரை ஒட்டிய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் தொடர்ந்து அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பூஞ்ச் மற்றும் **Tangdhar** மாவட்டங்களில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து, பாகிஸ்தான் இந்த தாக்குதல் நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் 15 பேர் உயிரிழந்ததாகவும், 43 பேர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்கள் குறித்த தகவல்கள் மற்றும் காணொலிகளை வழங்குமாறு தேசிய புலனாய்வு அமைப்பு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

9 6 5 4 9 5 8 8 1 6 – என்ற கைபேசி எண்ணிலும், 0 1 1 – 2 4 3 6 8 8 0 0 என்ற தொலைபேசி எண்ணிலும் பொதுமக்கள் தகவல்களை வழங்கலாம் என்றும் தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

>>>>><<<<<

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீருக்கு உட்பட்ட இடங்களில் செயல்படும் 9 தீவிரவாத முகாம்களை இந்திய பாதுகாப்புப் படையினர் ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் தாக்கியதற்கு உலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக இந்தியாவிற்கான இஸ்ரேல் தூதர் திரு. **Reuven Azar** விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், தீவிரவாத தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக இந்தியா மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

தீவிரவாத செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று ரஷ்யாவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் **Maria Zakharova** கூறியுள்ளார்.

தீவிரவாத்தை ஒடுக்குவதற்கு உலகளாவிய ஒத்துழைப்பு அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் உறுதியுடன் உள்ளதாக கூறியுள்ள ஜப்பான், இருநாடுகளும் கட்டுப்பாட்டுடன் செயல்படுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

ஆப்பரேஷன் சிந்தூருக்கு பின்னர், நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக கூறியுள்ள ஜெர்மனி, இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் தொடர்பில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையில், இருநாடுகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வை காண உதவத் தயாராக உள்ளதாக கத்தார் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

உத்ராகண்டின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை வலுப்படுத்துமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. **Pushkar Singh Dhami** அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறும் காவல்துறையினரை கேட்டுக் கொண்டார்.

சர்தாம் யாத்திரை நடைபெறவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக, எல்லைப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ராஜஸ்தானிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

**Bikaner Jodhpur** மற்றும் **Kishangarh** –ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்களிலிருந்து இயக்கப்படும் விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

எல்லைப் பகுதியை ஒட்டிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அரசு ஊழியர்களின் விடுமுறை ரத்து செய்யப்பட்டு, தலைமையகத்தை விட்டு வெளியேறக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாடுமுழுவதும் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை, 244 மாவட்டங்களில் இன்று நடைபெற்றது.

தில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு ஒத்திகையில் தீயணைப்புப் படை வீரர்கள், காவல்துறையினர் மற்றும் தன்னார்வலர்கள் பங்கேற்றனர்.

இன்றிரவு 8 மணி முதல் 8.15 மணிவரை தில்லி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, ஒத்திகை மேற்கொள்ளப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒடிசாவில் 12 மாவட்டங்களில் இந்த ஒத்திகை நடைபெற்றது.

புவனேஷ்வர், சம்பல்பூர், ரூர்கேலா உள்ளிட்ட நகரங்களில் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

அம்மாநில ஆளுநர் மாளிகையில் மாலை 4 மணியளவில் சைரன் ஒலிக்கப்பட்டு, இந்த ஒத்திகை தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கேரளாவில் 126 இடங்களில் இந்த ஒத்திகை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காவல்துறையினர், தீயணைப்புத்துறையினர், பாதுகாப்பு தன்னார்வலர்கள் இதில் பங்கேற்றதாகவும் அவர் கூறுகிறார்.

அரைமணி நேரத்திற்கும் மேலாக இந்த ஒத்திகை நடைபெற்றதாக கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை துறைமுகம் மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இந்த ஒத்திகை நடைபெற்றது.

>>>>><<<<<

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 22 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட **Karqutta** வனப்பகுதியில் நக்ஸலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாகவும், இதில் 22 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>><<<<<

சிபிஐ இயக்குநர் திரு. பிரவின் சூட்-ன் பதவிக்காலத்தை ஓராண்டிற்கு மத்திய அரசு நீடித்துள்ளது.

நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

திரு. பிரவின் சூட் வரும் 25ஆம் தேதி ஓய்வுபெறவிருந்த நிலையில் இந்த பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகளுக்கான இணையவழி விண்ணப்பப் பதிவினை உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவில், உயரதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

தேர்வில் 91 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

பஞ்சாபில் நேரிட்ட சாலை விபத்தில் 6 பள்ளி மாணவர்கள் உயிரிழந்தனர்.

பாட்டியாலாவில் பள்ளி மாணவர்கள் சென்று கொண்டிருந்த வாகனம், டிப்பர் லாரியுடன் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 23 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 337 ரன் எடுத்தது.

**Jemimah Rodrigues** அதிரடியாக ஆடி 101 பந்துகளில் 123 ரன் குவித்தார்.

338 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த தென்னாப்பிரிக்கா 7 விக்கெட் இழப்புக்கு 314 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா இலங்கையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவரிசை பட்டியலின் ஆல்ரவுண்டர் பிரிவில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

**>>>>><<<<<**

தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-17, 21-18 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் **Chia Hao Lee**-யை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Unnati Hooda**-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

ஆசிய செஸ் சாம்பியன் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்டில் இன்று தொடங்கியது.

**>>>>>END<<<<<**